<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.59/2025 | Date | : 04-03-2026 |
| Deposition of Witness for | : அ.சா.5 | Taluk | : |
| Name | : திரு.T.ரமேஷ் | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.03.2026.
<u>(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்ட காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.01.2025 ம் தேதி, மாலை சுமார் 04.30 மணிக்கு தேவூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு.அருண்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, முன்னதாக குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற இருசாகவுண்டர், என்பவரின் சாலை விபத்து காயத்தகவலின் பேரில் தேவூர் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சீரங்கன், என்பவர் மேற்படி மருத்துவமனை சென்று பார்த்தபோது, விபத்தில் அடிப்பட்டவர் ஈரோடு KMCH மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக தகவல் அறிந்து அங்கு சென்று பார்த்தபோது, அடிப்பட்டவர் மயக்க நிலையில் இருந்ததால் உடன் இருந்த அவரது பேரன் தமிழ்செல்வன், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து ஒப்படைத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் தேவூர் காவல் நிலைய குற்ற எண்.05/2025, சட்டப்பிரிவுகள்

281, 125(a) of BNS-ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலை, வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

2) பின்னர், இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அவர் அன்றைய தினமே, மாலை சுமார் 05.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முத்து மற்றும் தமிழரசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார் (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவயிட சாட்சிகள் விஷ்ணு, துரைசாமி, முத்து, தமிழரசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) பின்னர், இவ்வழக்கில் காயம்பட்ட இருசாகவுண்டர், மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்தவர் கடந்த 06-01-2025 ம் தேதி, மாலை சுமார் 06.27 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் அறிந்து அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்து, இவ்வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக

எனது பார்வைக்கு வைத்துள்ளார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு நான் கடந்த 07-01-2025 ம் தேதி, ஈரோடு அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன இருசாகவுண்டர், த/பெ.இருசாகவுண்டர், என்பவரின் பிரேதத்தின் மீது காலை சுமார் 10.00 மணிமுதல் பிற்பகல் 12.00 மணிவரை பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்பாக பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளேன். பின்னர் பிரேதத்தை இறப்பிற்கான காரணம் அறிய பிரேத பரிசோதனை செய்ய வேண்டி விபத்தில் இறந்துபோன இருசாகவுண்டர், என்பவரின் பிரேதத்தை தேவூர் காவல் நிலைய முதல்நிலை காவலர்-2331, திரு.மாதேஸ்வரன், என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளேன். (**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் பிரதீப், த/பெ.காசிலிங்கம், என்பவர் TN 52 J 0679 என்ற பதிவு எண் கொண்ட Bolero Pickup Maxi Truck வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து இவ்வழக்கின் எதிரி பிரதீப், த/பெ.காசிலிங்கம், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 10.01.2025 ம் தேதி, பிற்பகல் சுமார் 01.30 மணிக்கு தேவூர் காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளேன்.

6) பின்னர், கடந்த 21-01-2025 ம் தேதி, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 52 J 0679 என்ற பதிவு எண் கொண்ட Bolero Pickup

Maxi Truck மற்றும் TN 30 Z 8701 என்ற பதிவு எண் கொண்ட TVS 50 இருசக்கர வாகனத்தையும் சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளேன்.

7) பின்னர், கடந்த 06-02-2025 ம் தேதி, TN 52 J 0679 என்ற பதிவு எண் கொண்ட Bolero Pickup Maxi Truck மற்றும் TN 30 Z 8701 என்ற பதிவு எண் கொண்ட TVS 50 இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளரான திருமதி.புஷ்பா, என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றேன். ( **TN 52 J 0679 என்ற பதிவு எண் கொண்ட Bolero Pickup Maxi Truck மற்றும் TN 30 Z 8701 என்ற பதிவு எண் கொண்ட TVS 50 இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் ஆகியவை கு.வி.மு.ச. பிரிவு 294-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) பின்னர், அன்றைய தினமே, இவ்வழக்கில் இறந்துபோன இருசாகவுண்டர், என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த ஈரோடு அரசு மருத்துவமனை டாக்டர்.வினோஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன் (**பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

9) பின்னர், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் மற்றும் பிரேத விசாரணை அலுவல் பணிக்கு சென்ற முதல்நிலை காவலர் திரு.மாதேஸ்வரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்துள்ளேன். அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS - ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

நான் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Ramesh